தினகரன் 27.02.2019

### வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில்

# மாணவிகளுக்கு ரத்த சோகை நோய் கண்டறியும் முகாம்




▶ வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் டிஎன்பிஎல் சார்பில் அரசு பள்ளி மாணவிகளுக்கான ரத்த சோகை நோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாமை காகித நிறுவன செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் துவக்கி வைத்து பார்வையிட்டார். அருகில் முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன்.

**க.பரமத்தி, பிப். 27:** கரூர் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் அரசு பள்ளி மாணவிகளுக்கான ரத்த சோகை நோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாமை காகித ஆலை செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் தொடங்கி வைத்து சத்தான பொருள்கள் வழங்கி பார்வையிட்டார்.

கரூர் ஒன்றியம் காகிதபுரம் பேரூராட்சியில் டிஎன்பிஎல் நிறுவன சமுதாய நலப்பணி திட்டம் மூலம் ஆலையை சுற்றியுள்ள அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் கல்வி பயிலும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகளுக்கு வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையுடன் இணைந்து இலவச ரத்த சோகை நோய் கண்டறியும் முகாம் அரசு மருத்துவமனையில் நடைபெற்று வருகிறது. கடந்த 18ம் தேதி நடந்த முகாம் துவக்க விழாவிற்கு டிஎன்பிஎல் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் தலைமை வகித்தார்.

காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து சத்தான பொருள்கள் வழங்கி பார்வையிட்டார். தொடர்ந்து தினந்தோறும் 50 மாணவிகள் வீதம் அந்தந்த அரசு பள்ளியில் இருந்து காகித நிறுவன மெட்ரிக் பள்ளி பேருந்தின் மூலம் அழைத்து வரப்பட்டு ரத்த வகை கண்டறிதல் மற்றும் ரத்த சோகை கண்டறியும் முகாம் 10 நாட்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசு பள்ளி மாணவிகளுக்கு ரத்த சோகை நோய் கண்டறியப்பட்டு மாணவிகளுக்கு சத்தான உணவுப் பொருட்கள் வழங்கப்பட உள்ளது.